# தமிழகம்

### தமிழகத்திற்கு மத்திய அரசு விருது

- நமது நாட்டில் 69 சுற்றுச்சூழல் தகவல் மையங்கள் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன.
- தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் இயக்குநரகத்தின் கீழ் செயல்படும், சுற்றுச்சூழல் தகவல் மையம் கடந்த மூன்றாண்டுகளில், 2013-14, 2014-15 மற்றும 2015-16 முறையே 81, 88 மற்றும் 93 மதிப்பெண்கள் பெற்றது.
- இதனை தொடர்ந்து தமிழக சுற்றுச்சூழல் துறையின் சுற்றுச்சூழல் தகவல் மையத்திற்கு 2015-16-ஆம் ஆண்டிற்கான நாட்டின் மிகச் சிறந்த சுற்றுச்சூழல் தகவல் மையம் என்ற விருதினை மத்திய அரசு வழங்கியது. (ஏப்ரல் 21)

### கல்லூரி மாணவர் சாதனை

- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆர்எம்கே பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவர் ஜி.தீபக் வாகன டயர்களில் காற்றின் அழுத்தத்தை சீராக பராமரிக்கும் முறையை பரிசோதனை முறையில் செய்து வெற்றி கண்டுள்ளார்.
- இதற்காக அவர் தமது கல்லூரி மூலம் காப்புரிமையும் பெற்றுள்ளார். இவரது கண்டுபிடிப்புக்காக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் சிறந்த மாணவர் திட்டம் 2016-க்கான ஐஎஸ்டி இ-மணக்குள விநாயகர் விருது வழங்கப் பட்டது.
- மேலும் டாக்டர் அப்துல் கலாம் கல்வி அறக்கட்டளையின் சிறந்த திட்டம் விருதுக்கு தீபக்கின் புதிய கண்டுபிடிப்புக்கு பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. (ஏப். 29)

### 15-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு

- பசுவை தெய்வமாக கருதுவது, தானம் வழங்குவது குறித்த 15-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு, திண்டுக்கல்-பழனி ரோட்டில் முருகபவனம் அருகே கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- பசுக்கள் செழிப்புடன் இருக்கும் நாடு, வளம் உள்ளதாக இருக்கும். நாடு செழிக்க, பசு வழிபாடு முக்கியம் என்றும், லட்சுமியின் அவதாரமாக பசு விளங்குவதையும் இந்த கல்வெட்டு எடுத்துரைக்கிறது.
- இந்த கல்வெட்டில் மன்னருக்கும், ராணிக்கும் மேலாக, பசுவின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. (மே 3)

### வருவாய் பற்றாக்குறை மாநிலம்

- 2016-17-ஆம் நிதியாண்டில், தென்னிந்திய

### கையடக்க செயற்கைக்கோள்



- தமிழகத்தைச் சேர்ந்த 12-ம் வகுப்பு மாணவரான முகமது ரிஃபாக் ஷாரூக் தயாரித்துள்ள கையடக்க செயற்கைக்கோள், நாசா விண்கலம் மூலம் சில மாதங்களில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.
- இந்த செயற்கைக்கோள் 64 கிராம் எடை கொண்டதாகும். செயற்கைக்கோள் முழுவதும் 3டி பிரிண்ட் தொழில்நுட்பத்தில் கார்பன் ஃபைபரால் உருவாக்கப்பட்டது.
- டெக்னாலஜி டெமான்ஸ்ட்ரேட்டர் வகையை சேர்ந்த இந்த செயற்கைக்கோள், விண்வெளியில் நிலவும் கதிர்வீச்சு, அங்கிருக்கும் சூழல், அவற்றால் செயற்கைக்கோள்கள் அடையும் மாற்றம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும்.
- விர்ஜீனியா ஏவுதளத்தில் இருந்து எஸ்ஆர்.4 ராக்கெட் மூலம் ஜூன் மாதம் இது விண்ணில் ஏவப்படவுள்ளது. இவ்வகை செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படுவது இதுவே முதல்முறையாகும். (ஏப்ரல் 22)

## அவ்வையார் விருது




- சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை-அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் சிறந்த பெண்களில் ஒருவரை தேர்வுசெய்து அவருக்கு தமிழக அரசு சார்பில் அவ்வையார் விருது வழங்கப்படுகிறது.
- 2017-ஆம் ஆண்டுக்கான இந்த விருது கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக மகளிர் நலம் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்குத் தொண்டாற்றி வரும் அகில இந்திய மாதர் சங்கத்தின் தலைவர் பத்மா வெங்கட்ராமனுக்கு வழங்கப்பட்டது.
- சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பத்மா வெங்கட்ராமனுக்கு விருதை வழங்கினார். (மே 2)

மாநிலங்களின் வருவாய் பற்றி ரிசர்வ் வங்கி ஆண்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் வருவாய் பற்றாக்குறை (revenue deficit) உள்ள மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மே 15)

## பூமிக்கடியில் மெட்ரோ ரயில்

- சென்னை நகரில் வண்ணாரப்பேட்டை முதல் மீனம்பாக்கம் வரையும், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் முதல் கோயம்பேடு வழியாக விமான நிலையம் வரையும் மெட்ரோ ரயில் சேவைக்கான பணி கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது.
- கடந்த ஆண்டு, கோயம்பேட்டில் இருந்து பரங்கிமலை வரையும், பின்னர் பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு வரையும் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, தற்போது வரை செயல்பட்டு வருகிறது.
- இந்நிலையில், சென்னை எழும்பூர் அருகே நேரு பூங்காவில் இருந்து திருமங்கலம் வரை பூமிக்கடியில் சுரங்க வழியாக மெட்ரோ ரயில் சேவை, தற்போது தொடங்கியது.
- மத்திய அமைச்சர் வெங்கய்யா நாயுடு, கொடியசைத்து, ரயில் சேவையை தொடங்கி வைத்தார்.
- இந்த மெட்ரோ ரயில் சேவை, சுமார் 5 மாடி கட்டிடத்தின் அளவுக்கு பூமிக்கடியில் அமைக்கப்பட்டுள்ளது. (மே 14)

## பர்வதமலை நகரம்

- முதலாம் ராஜராஜ சோழன் அவையில் இருந்த அமைச்சர் ஜெயந்தனை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் 10-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று கலசப்பாக்கம் அருகே தென்மகதேவ மங்கலத்தில் அமைந்துள்ள பர்வத மலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சமஸ்கிருத மொழியில் செதுக்கப்பட்ட இந்த கல்வெட்டை புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத் துறை படியெடுத்துள்ளது.
- அதில் தெரிவிக்கப்பட்டுள்ள செய்திகள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.
- அதில் ராஜராஜ சோழன் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்றும், அவரிடம் இருந்த ஜெயந்தன் எனும் அமைச்சர் நல்ல பேச்சாற்றல் மிக்கவர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த 10-ஆம் நூற்றாண்டு கல்வெட்டை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் சதீஷ் என்பவர் கண்டுபிடித்துள்ளார். (மே 15)

# தேசம்

### ஆசிய அளவிலான சாதனையாளர்கள்

- அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் '30 Under 30' என்ற பெயரில் ஆசிய அளவில் 30 வயதிற்குட்பட்ட சாதனையாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- விளையாட்டு, தொழில்முனைவோர், சினிமா, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களில் 30 வயதிற்குட்பட்டவர்களை தேர்வு செய்து இந்த பட்டியல் வெளியிடப்படுகிறது.
- இதில் இந்தியாவில் இருந்து பிரபல ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மாக்கர், மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் உள்ளிட்ட 53 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.
- இந்த சாதனையாளர்கள் பட்டியலில் சீனா முதலிடத்தையும், இந்தியா இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன. (ஏப். 22)

### இந்திய கடற்படை ஏவுகணை

- இந்தியாவும், ரஷ்யாவும் இணைந்து உருவாக்கியுள்ள பிரமோஸ் ஏவுகணை சோதனை நீர்மூழ்கிக்கப்பல், கப்பல், போர் விமானம், தரைவழி என பல வழிகளில் ஏவக்கூடியதாகும்.
- இந்த பிரமோஸ் ஏவுகணை சோதனையை இந்திய கடற்படை வங்காளவிரிகுடாவில் நடத்தியது. இது நிலத்தில் வைக்கப்பட்டிருந்த உரிய இலக்கை வெற்றிகரமாக தாக்கியது.
- நிலத்தில் உள்ள இலக்கை குறிவைத்து தாக்கும் பிரமோஸ் ஏவுகணை சோதனையை கடற்படை நடத்தி இருப்பது இதுவே முதல்முறையாகும். (ஏப்ரல் 22)

### வீனசுக்கு செயற்கைக்கோள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் தனது அடுத்த செயற்கைக்கோளை வீனஸ் கிரகத்துக்கு அனுப்ப உள்ளது.
- 2020-ஆம் ஆண்டில் இந்த செயற்கைக் கோள் அனுப்பப்பட உள்ளது.
- வீனஸ் கிரகம் பூமியை போல் பல அம்சங்களில் ஒன்றுபடக் கூடியது.
- தோற்றத்திலும் அளவிலும் பூமியை போன்று இருப்பதால் இந்த கிரகத்துக்கு செயற்கைக்கோள் அனுப்புவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஏப்ரல் 23)

### சந்திரனிலிருந்து ஹீலியம் வாயு

- இந்தியாவுக்கு தேவையான எரிசக்தி பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் சந்திரனிலிருந்து அதிக சக்தியுடைய எரிபொருளான ஹீலியம்-3 வாயுவை கொண்டுவர இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் இந்த திட்டம் நிறைவேறும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. (ஏப்ரல் 24)

### அக்னி-3 ஏவுகணை சோதனை

- முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்

### இந்தியா-துருக்கி ஒப்பந்தங்கள்



- துருக்கி அதிபர் ரிசப் தய்யிப் எர்டொகன் இந்தியாவில் 2 நாள் அரசுமுறை பயணம் மேற்கொண்டார்.
- டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மோடியை எர்டொகன் சந்தித்துப் பேசினார்.
- இந்த சந்திப்பின்போது, பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் நிலவும் இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்தனர்.
- பின்னர் இரு தலைவர்கள் முன்னிலையில் இருநாடுகளுக்கிடையே தொலைத்தொடர்பு துறை ஒப்பந்தம் உள்பட 3 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. (மே 2)